DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC 211 / 2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW.3 |
| Name | திரு.மம்மது |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | உதவி ஆய்வாளர், குரும்பூர் காவல் நிலையம். |
| Religion | |
| Age | |

<u>( எதிரி ஆஜர், )</u>

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-07-2026.(நேரம்: 04.15 P.M )**

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது குரும்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்கிறேன். இந்த வழக்கினை பதிவு செய்த SSI முருகன் மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் திருமதி.தனலெட்சுமி ஆகியோர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 17.03.2017 ம் தேதி 20.30 மணிக்கு குரும்பூர் காவல் நிலைய பொறுப்பில் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் இருந்தபோது குரும்பூரை சேர்ந்த ஆசைத்தம்பி மனைவி மாலா என்பவர் நிலையம் ஆஜராகி

கொடுத்த புகார்மனுவைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 40/2017 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் 4 of TNPHW Act ஆக பதிவு செய்துள்ளார். **புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2, 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஸ்ரீவைகுண்டம் அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

3. விசாரணை நகலை விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்ததை அவர் 17.03.2017 ம் தேதி இரவு 21.30 மணிக்கு சாட்சிகள் சுப்பையா மற்றும் பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு சாட்சிகள் மாலா, தெய்வராணி, செண்டம்மாள், நல்லக்கண்ணு, பெருமாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. விசாரணையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரியை தேடிசென்றபோது வென்கலவன் தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Crlmp No.1010/2017 பிரகாரம் முன் ஜாமின் பெற்றதால் கைது செய்ய இயலவில்லை.

6. இவ்வழக்கில் காயம்பட்ட நபர்க்கு சிகிட்சை அளித்த ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திரு. ஜெரால்டுலிவிங்ஸ்டன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்து காயச்சான்று பெற்றுள்ளார். மருத்துவர் அளித்த **காயச்சான்று அ.சா.ஆ 6 ஆகும்.**

7. இத்துடன் தனது விசாரணையை முடித்து 13.04.2017ம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323,506(2) இதச மற்றும் 4 of TNPHW Act ஆக சட்டமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றம் அனுப்பியுள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சொன்னநேரத்தில் சொன்னவிதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 னிடம் எழுதப்படாத வெள்ளைதாளில் கையொப்பம் மட்டும் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்வாக்குமூலம் போலிசாரால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னுல் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னுல் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.07 17:24:38 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்